IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ரமேஷ் |
| FATHER NAME | - | திரு.வரதராஜ் |
| AGE | - | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.06.2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை–மனுவின் பேரில்**

**நான் வஞ்சூரில் இருந்த தான் வருகிறேன். வஞ்சூரில் இருந்து தினமும் பார் வேலைக்கு போய் வருகிறேன். பாரில் சர்வராக கிளாஸ் டம்ளர் கிளின் செய்வது எனது வேலை. பார் மதியம் 12.00 மணிக்கு திறந்து இரவு 10.00 மணிக்கு மூடி விடுவோம் என்றால் சரி. நான் பாருக்கு காலை 11.00 மணிக்கு வேலைக்கு வருவேன். பாரில் இருந்து ஆறு அரை கி.மீ தூரம் இருக்கும். ஆறினுடைய பார் அருகேயுள்ள கரையில் இருந்து காங்கயநல்லூர் கரை சுமார் 3 கி.மீ இருக்கும் என்றால் சரி. நான் காவல் நிலையம் செல்லவில்லை. காவல் நிலையத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஆற்றில் புதர் மரம் செடிகள் உள்ளது. அந்த கரையிலேயே புதர் மரம் செடிகள் உள்ளது. போலிசார் எத்தனை மணிக்கு கடைக்கு போனார்கள் என்று எனக்கு தெரியாது. ஆற்றில் நான் கையெழுத்து செய்யும்போது 2 போலிசார் இருந்தார்கள். எனக்கு ஆய்வாளர் காவல்ஆய்வாளர் வித்தியாசம் தெரியாது. ஆற்றில் இருந்த போலிசார் ஸ்டார் வைத்து உடை அணிந்து இருந்தார்கள். அப்போது 2 போலிசார் மற்றும் எதிரிகளை தவிர வேறுயாறும் அங்கு இல்லை. எதிரிகள் அனைவரையும் 2 போலிசார்கள் தான் பிடித்து வைத்திருந்தார்களா என்று எனக்கு**

தெரியாது. எதிரிகள் ஆற்றில் உட்காா்ந்திருந்தார்கள். எதிரிகளை உட்காரவைத்துவிட்டு போலிசார் நின்று இருந்தார்கள். போலிசாரிடம் லத்தி மட்டும் இருந்தது துப்பாக்கி எதுவும் இல்லை. அந்த இடத்தில் 2 போலிசார் மற்றும் எதிரிகள் தவிர வேறுயாரும் இல்லை. ஆற்றில் எந்தவித கடைகளும் இல்லை. ஆற்றில் கரன்ட் கம்பத்தில் விளக்கு எரிந்தது. ஆற்றில் தண்ணீர் போகும். என் முதலாளி உமா சங்கர் . அந்த கடையை உமாசங்கர் தான் வேறுயாரும் கிடையாது. உமா சங்கர் காலையில் பொருட்களை எடுத்துவைத்துவிட்டு மறுநாள் காலையில் தான் வருவார். காலையில் 07.00 மணிக்கு ஆற்றிக்கு போனோம். 07.05 மணிக்கு போலிசார் தட்டச்சு செய்த பேப்ரில் கையெழுத்து வாங்கிகொண்டு அனுப்பிவிட்டார்கள். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது அதன் விவரம் என்ன அதை பற்றி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் எப்போது எங்கே வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்திற்கு முதல் விசாரணையிக்கு வந்த போது ஒப்புதல் வாக்குமூலம் நேரம் என்ன விவரம் எந்த எதிரி கொடுத்தது என சொல்லி கொடுத்ததின் பேரில் நான் சொன்னேன் என்றால் சரி. நான் எதிரிகள் எல்லோரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டார்கள் என்றும் போலிசார் சொல்லி அதில் என்னை கையெழுத்து போட சொன்னார்கள் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். நான் இது வரை சாட்சியாக நீதிமன்றத்திற்கு வந்ததில்லை. ஒப்புதல் வாக்குமூலம் என்ற வார்த்தை, ஒப்புதல் வாக்குமூலம் என்ன என்று போலிசார் முதல் விசாரணையின் போது எனக்கு சொல்லி தரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. ஆனந்தன் மனைவி எங்கே வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது, ஆனந்தர் பாருக்கு குடிக்க வரமாட்டார். ஆனந்தன் அப்பா பெயர் எனக்கு தெரியாது. போலிசார் எனக்கு என்னுடைய முதல்

விசாரணையின் போது 1 ஆம் எதிரி ஆனந்தனின் பெயரை சொன்னதால் தான் எனக்கு 1 ஆம் எதிரி ஆனந்தன் பெயர் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 18.06.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore